ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

आपत्सु मित्रं जानीयात् युद्धे शूरं ऋणे शुचिम्।
भार्यां क्षीणेषु वित्तेषु व्यसनेषु च बान्धवान्॥

மித்திரனுடைய குணத்தை ஆபத்து நேர்ந்தகாலத்தி
லும், சூரனுடைய சக்தியை யுத்தசமயத்திலும், சுத்த
னென்பவனை கடன்தீர்க்கும் தருணத்திலும், பத்நியின்
ஸ்வபாவத்தை தரித்திரதசையிலும், பந்துக்களின் அபி
மானத்தை துக்க காலங்களிலும் தீர்மானிக்கவேண்டும்.

நாம் ஸ்வ்பாவமா யிருக்கும் பொழுது ஒருவன் நம்மிடம்
மித்திரனா யிருப்பதைக்கொண்டு அவனைநம்பாமல்ஆபத்ஸமயத்
திலும் சரியாயிருக்கிறானா என்று பார்த்துப்பிறகு தீர்மானிக்க
வேண்டும். இக்கருத்தையே,

तन्मित्रमापदि सुखे च समक्रियं यत्।

என்று ஓர் கவிகூறியிருக்கிறார். ஒருவன் தன்னை சூரனாகப்
பேசுவதால் மாத்திரம் சூரனாகமாட்டான், காரியத்திலும் அவ்
விதமே காண்பித்தபிறகுதான் சூரனாவான், நமக்கிருக்கும் செல்
வப்பெருக்கால், பார்யையினிஷ்டங்களை பூர்த்தி செய்யுங்கா
லத்தில் அவனிருக்கும் நிலைமையைக் கொண்டு பிரீதியுள்ளவ
ளாக நினைக்கக்கூடாது. செல்வம் குறைந்து வயதுமுதிர்ந்து
நாம், ஆகாரத்திற்கு வருந்தும் சமயத்தில் அவளிருக்கும் ரீதி
யைக் கொண்டு தீர்மானிக்கவேண்டும்.

तृणीकृत्य धनं जीवं या भार्याऽऽराधिता मया।
अधनं जरठं मां सा तूलयापि न मन्यते॥

பொருளையும், ஜீவனையும் பொருட்டாய் எண்ணாமல் யாதொரு
பார்யை ரக்ஷிக்கப்பட்டாளோ, அவளே பொருளும்போய்
முதிர்ந்த வபதையடைந்து கஷ்டப்படும் காலத்தில், பஞ்சா
கக்கூட என்னை நினைக்கவில்லை என்று ஒருவர் கவலைப்படுவதாக
வோர் பண்டிதர் சொல்லுகின்றார். நாம் கஷ்டப்படுங் காலத்தி
லும் நம்மிடத்தில் பந்து பாவத்தை எவர்கள் காண்பிவிக்கிறார்
களோ அவர்களே உண்மையான பந்துக்களாவார்கள்.

நன்றியறிதல்.

प्रथमवयसि पीतं तोयमल्पं स्मरन्तश्शिरसि निहित-
भारा नारिकेला नराणाम् । सलिलममृतकल्पं दद्यु-
राजीवितान्तं नहि कृतमुपकारंसाधवो विस्मरन्ति ॥

தென்னமரமானது தன் பால்யத்தில், தான் வளருவதற்காக வார்க்கப்பட்டிருக்கும் அற்பநீரை பெரிய உபகாரமாகக்கருதி அமுதம்போற் சுவை பொருந்திய இளநீரைத் தலையால் சுமந்துகொண்டு தான் ஜீவித்திருக்கும் வரையில் எப்படி வளர்த்தவனுக்கு கொடுக்கின்றதோ அவ்விதம் மஹநீயர்களான ஸாதுக்கள் பிறரால் தமக்கு செய்யப்பட்ட நன்றியை ஒருக்காலும் மறக்கமாட்டார்களன்றோ.

பிறர் செய்யும் காரியத்தை நன்மை தீமை யென்று பகுத்தறியும் திறமையற்று, ஸ்தாவரமென்கிற பெயரால் விளங்கும் தெங்கானது, அறிஞர்களுக்கு மறி வேற்படாத பால்யத்தில் தனக்கு ஒருவர் கொடுத்த ஜலம், அற்பமோ, அதிகமோ, ருசியுற்றதோ ருசியற்றதோ, விருப்புற்றபோதோ வெறுப்புற்றபோதோ என, இத்தகைய யாதொரு விசாரமும் செய்யாமல், தன் அபிவிருத்திக்கு அந்த சமயத்தில் ஆதரவுடன் அற்பணம் செய்த நீரையெ சிறந்த உபகாரமாகக்கருதித் தன் ஆயுள்முழுதும் தனக்குக் கொடுத்ததைக் காட்டிலும் அதிக ருசிபொருந்திய நீரையும், தேங்காய் முதலியவைகளையும் கொடுக்கிற தென்

ருல்,அறிவுடைய நம்போன்ற மானிடர்கள் பிறரிடமிருந்து ஓர் உபகாரத்தைப் பெற்ருல் எவ்விதமிருக்க வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமா? பிறரால் செய்யப்பட்ட நன்றியை மறக்காமல் நம் சக்திக்கியன்றவாறு பிரதியுபகாரத்தைச் செய்ய வேண்டும். இவ்விதமில்லாவிடில் அவன் கிருதக்னனுகிருன்.

ब्रह्मघ्ने च सुरापे च चोरे भग्नव्रते तथा ।
निष्कृतिर्विहिता लोके कृतघ्ने नास्ति निष्कृतिः ॥

பிர்மஹத்தி செய்தவன், மத்தியபானம் பண்ணினவன், திருடன் ஒரு நியமத்தைக் கெடுத்தவன். இவர்களுக்கு சாஸ்திரத்தில், ப்ராயச்சித்தம் கூறப்பட்டிருக்கின்றது, கிருதக்னனுக்கு பரிஹாரமே இல்லே.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது, தசரத மஹாராஜாவுக்கு அருமைப் புதல்வராய்த்தோன்றிய ஸ்ரீராகவன், தந்தையின் ஆக்ஞையை அனுஷ்டிக்க வேண்டி கானகம் செல்லும் ஸமயத்தில், கங்கையைத்தாண்ட வேண்டி குஹனென்னும் ஓர் வேடன் ஸ்ரீராமன், லக்ஷ்மணன், சீதாதேவி இவர்களை ஓடத்திலேற்றி, அக்கரை கொண்டுபோய் சேர்த்தவுடன், ஸ்ரீராகவன், வேடன் தனக்குச்செய்த உபகாரத்திற்குச் செய்த பதிலுபகாரத்தை ஓர் கவி

तीर्त्वा भूतेशमौलिस्रजममरधुनीमात्मनासौ तृतीय-
स्तस्मै सौमित्रिमैत्रीमयमुपकृतवानातरं नाविकाय ॥

தம்மால் மூன்ருவது ஸங்கியையடைந்த ஸ்ரீராமன் ஸ்ரீபரமேசுவரனுடைய சிரஸில் புஷ்பமாலேபோல் விளங்கும் தேவநதியான கங்கையைத் தாண்டி, அந்த ஓடக்காரனை, குஹனுக்கு லக்ஷ்மணரை ஸ்நேகம் பண்ணிவைத்து அதைபவனுல் செய்யப்பட்ட வுபகாரத்திற்கு மூல்யமாக உபகரித்தார்.

என்று நிரூபித்திருக்கிறார். ஸ்நேகமென்பது, தனக்குச் சமமான, சக்தி, கௌரவம், பொருந்திய, இருவர்களுக்கேற்படக்கூடியதேயன்றி, எல்லாவிதத்தாலும், கீழானவர்களிடமேற்பட நியாயமில்லை, லக்ஷ்மணருடைய மஹிமை எங்கே; வேடனுடைய தன்மை எங்கே, இவர்களில், ஒருவருக்கொருவர், எவ்வளவோ தாரதம்ய மிருந்தாலும் அதைச்சற்றும் கவனியாமல், ஸாக்ஷாத் பகவானே, லக்ஷ்மணருடைய ஸ்நேகத்தை அவனுக்கு மூல்யமாக உபகாரித்தாரென்றால் அந்த வேடனால் முந்திசெய்யப்பட்ட அற்பவுபகாரத்தைச் செய்தபோதிலும் அதையே மிகப்பெரிதாய்க் கருதியிவ்விதம் செய்திருக்கிறார். ஔவையாரும் "நன்றி மறவேல்" பிறர் செய்த நன்றியை ஒருக்காலும், மறவாதே, என்று செப்பியிருக்கிறாள். இவைகளால் நம் போன்றவர்களுக்குப் பிறரால் செய்யப்படும் நன்றியை நாம் எவ்விதம் பாராட்டவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். சுபம்,

---

கோமகிமை.

ச்யவன மஹரிஷிக்கும், நஹுஷ மஹாராஜனுக்கும் ஸம்வாதரூபமான, ஆநு சாஸனிகம், 85வது அத்தியாயத்தால், கோக்களின் மஹிமை வெளியாகிறது. அதைச் சுருக்கிக் காட்டுவோம்.

முன்னொருகாலத்தில், பிருகு மஹரிஷியின்குலத்திலுதித்த ச்யவன மஹரிஷியானவர், காமக்ரோதாதிகளான சத்துருக்களை ஜயித்து, ஸர்வப் பிராணிகளுக்கும் மித்ரராயிருந்து, பிரசித்தராய் விளங்கினர். அம்மகான் கங்கை யமுனை இம்மகாநதிகளின் நடுவில், பிரவேசித்து, பன்னிரண்டு வருடங்கள், கோடூரமான தவஞ்செய்துவந்தார். அவர், காற்றின் வேகத்

திற்குஞ் சமமான வேகமும், பயங்கரமும், பேரொலியுங்கொண்ட அந்நதிகளின் வேகத்தை எதிர்த்து தவஞ்செய்யலானார். அவ்விதமா யிருக்கையில், நதிகளும் அவரை வலஞ்சுற்றியே வந்தன. அவரைச்சிறிதும் பீடிக்கவில்லை, அம்மகான் ஜலத்தின் நடுவில், காஷ்டபூதராய்ச் சிறிதுகாலம், சயனிப்பார், சிற்சில சமயம், வெளியிலும், உயரத்தோன்றுவார் அப்போது, நீரில்வாழும் பிராணிகளுக்கு, அவர், ப்ரியமான பார்வையுடையவராயிருந்தார், மத்ஸ்யங்கள், களித்தமனதுடன் அவரை முகர்ந்துபார்த்தன, இவ்விதம் வெகு காலஞ்சென்றது.

அவ்வாறிருக்கையில் ஒருசமயம், செம்படவர்கள் வலைகளை எடுத்துக்கொண்டு அங்கு வந்தார்கள். அவர்கள், புதிதான நூற்களால் அமைக்கப்பட்ட வலைகள், கங்கை யமுனை இவைகள் சேருமிடத்தில் வீசினார்களை வீசியவலைகளை இழுத்தார்கள். அப்போது அவ்வலைகளில் சிக்கின மத்ஸ்யங்களைக் கிரஹித்தார்கள். அப்போது அம்மத்ஸ்யங்களுடன் கலந்து வந்தவரும், ஆற்றிலுள்ள பாசியால் பூசப்பட்ட சரீரத்தோடு கூடினவரும், பசுமை நிறமான மீசி ஜடை இவைகளை தரித்தவரும், வேதங்களின் கரை கண்டவருமான அம்மகானைக்கண்டு தரையில் விழுந்து கைகூப்பிக் கொண்டு நின்றார்கள்.

அப்போது வலையில் சிக்கிக்கொண்டு தரையில் போடப்பட்ட மீன்கள் ஆபத்திற்கிடமாயின. அதைக்கண்டு, கிருபையுள்ள முனிவர் பெருமூச்சு விடலானார். அப்போது செம்படவர்கள், எங்களால் அறிவில்லாமையால் செய்யப்பட்ட பாபத்தை மன்னித்துக் கிருபையுடன் அனுக்கிரஹிக்க வேண்டும். தங்களுக்கு என்ன ப்ரியத்தை நாங்கள் செய்வோம் என்று வேண்டிக்கொண்டனர். அப்போது அம்மஹான், மத்ஸ்யங்களோடுகூட பிராணனை வைத்துக் கொள்வதோ விடுவதோ, அதுவே எனக்குப் பிரியமானது. நீரில் என்னுடன் வாழ்ந்து வந்த அம்மத்ஸ்யங்களை விட்டுப்பிரிய மனமில்லாதவனாகிறேன் என்றார்.

அதைச்செவியுற்று மிக்க அச்சங்கொண்ட அவர்கள், முககாந்தி குன்றினவர்களாய் நஹுஷமஹாராஜனிடம் தெரிவித்தார்கள்.

அதைக்கேள்வியுற்ற உடனேயே நஹுஷ மஹாராஜன், மந்திரிகளோடும் புரோகிதரோடும் சென்று, அம்மஹானை வணங்கிக் கைக்கூப்பிக் கொண்டு, முறைப்படி, புரோஹிதரைக்கொண்டு அர்ச்சித்துக் கேட்டுக் கொண்டான்.

நஹுஷன்——பிராம் மணோத்தமரே! தங்களுக்கு எது இஷ்டமோ அதைச் செய்வேன், சொல்லவேண்டும், முடியாத காரியத்தையும் செய்வேன் என்றான்.

ச்யவனர் சொன்னதாவது:—

மத்ஸ்ய ஜீவிகளான செம்படவர்கள் மிகுந்த சிரமத்துடன் கூடியுள்ளவரா யிருக்கின்றனர், மக்ஸ்யங்களோடு எனக்கும், எது விலை மதிப்புள்ளதோ, அதை இவர்களுக்குக் கொடு.

நஹுஷன்——புரோகிதரே, ச்யவனர் சொல்லிபபடி, அவருடைய நிஷ்க்ரயத்திற்காக ஆயிரம் பொன்கொடும் என்றான்.

ச்யவனர்—அரசனே ஆத்மாவின் மூல்யம் இவ்வளவு, என்று சொல்லத்தகாது. அதை உலகம்புகழாது, அதனால் நான் சொல்கிறேன், ஆத்மஸ்துதியாகச் சொல்லவில்லை, நான் ஆயிரம் பொன் மதிப்புள்ளவனல்லன். நீ என்ன எண்ணுகிறாய், உன்மதியால் நிச்சயித்துக்கொள்—என்றார்.

நஹுஷன்—நூறுயிரம் பொன் தருகிறேன், இது தங்களுக்கு மூல்யமாகுமா தாங்கள் என்ன எண்ணுகிறீர் என்றான்.

ச்யவனர்—நூறுயிரம் பொன்னுக்கும் நான் மதிக்கத்தகாதவன், மந்திரிகளோடு யோசித்துச்செய் என்றார்.

நஹுஷன் இவ்வாறு, கோடிபொன் தருகிறேன், பாதி ராஜ்யம் தருகிறேன், முழு ராஜ்யத்தையும் தருகிறேன் என்றபோதும், அதற்கும் நான் மதிக்கப்பட முடியாதவன், பிராம்

மணர்களுடன் யோசனைசெய், ரிஷிகளோடும் யோசனை செய் என்று, அம்மஹானும் மறுமொழி கூறினர்.

அப்போது, மந்திரி முதலானேருடன் கூடின நஹுஷன், துக்கங் கொண்டவனாய், சிந்திக்கும்போது, அவ்விடத்தில, நஹுஷனுக் கருகிலிருந்தவரும், கந்தமூலாதிகளைப் புசிப்பவரும், கோவினிடம் ஜனித்ததால், கவிஜர் गविजः எனப்படுவருமான ஒரு பிராம்மணர் எழுந்து, ராஜனைப்பார்த்து, நீர் துக்கப்பட வேண்டாம், நான் அம்மஹானை சந்தோஷிக்கச் செய்கிறேன் என்றார், அப்போது, நஹுஷன் மஹரிஷியே, சமமான மதிப்பைச்சொல்லும், நமது தேசத்தையும், குலத்தையும், ரக்ஷியும், இம்மஹான் கோபங்கொண்டால் மூவுலகையும் தஹிப்பார். தவம் இல்லாது. புஜபலமொன்றையே உடைய என்னைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா, மந்திரி முதலானவரோடு, ஆழ்ந்த ஜலத்தில் மூழ்கின எனக்குத் தோணியாக வேண்டும், மூல்யத்தைக் கற்பிக்கவேண்டும் என்றான்.

நஹுஷனுடைய வார்த்தையைக் கேட்டு, गविजातः கவிஜாதர் எல்லோரையும் சந்தோஷிக்கச் செய்துகொண்டு சொன்னர்.

ब्राह्मणानां गवां चैव कुलमेकं द्विधाकृतम् ।
एकत्र मन्त्रास्तिष्ठन्ति हविरन्यत्र तिष्ठति ॥

குலமானது, பிராம்மணகுலம் என்றும் கோகுலமென்றும் இரண்டாக்கப்பட்டிருக்கிறது, பிராம்மண குலத்தில் மந்திரங்கள் இருக்கின்றன, கோகுலத்தில் ஹவிஸ்ஸானது இருக்கிறது.

மேலும், வர்ணங்களில் உத்தமர்களான பிராம்மணர்களும், கோக்களும் விலைமதிக்கத் தகாதவர்கள். ஆகையால் கோவானது, மூல்யமாக ஆக்கப்படட்டும்,

என்ற மொழியைக் கேட்டதும் களிப்புற்ற நஹுஷன், ச்யவன மஹரிஷியைப்பார்த்து, பிரம்மரிஷியே, எழுந்திரும்

எழுந்திரும், கோவால் க்ரயஞ் செய்யப்பட்டவராகிறீர், கோவே தகுந்த மூல்யமென்று எண்ணுகிறேன் என்றான்.

உடனே, ச்யவனரும், இதோ எழுந்திருக்கிறேன், நல்ல மூல்யமே தந்தாய், கோவுக்குத் துல்யமான தனம் யாதொன்றையும், நான் காணவில்லை கோக்களைக் கீர்த்தனஞ் செய்வதும், சிரவணஞ் செய்வதும், பார்ப்பதும், எல்லாப் பாபங்களையும் நீக்கும். கோக்கள், லக்ஷ்மியின், வாஸஸ்தலமாகும், பசுக்களிடத்தில் பாபமே கிடையாது. தேவர்களுக்கு, ஹவிஸ் ஸ்ரூபமான அன்னத்தை பசுக்களே தருகின்றன. ஸ்வாஹாகாரவஷட் காரங்கள் பசுக்களிடத்திலேயே நிலை பெற்றிருக்கின்றன, கோக்களே யஞ்ஞங்களை நடத்தி வைக்கின்றன, யக்ஞத்திற்கு அவைகளே முகமாகின்றன, அவைகள் அமிழ்தத்திற்கே தங்குமிடம்; தேஜஸ்ஸாலும், சரீரத்தாலும் அவை அக்னிதுல்யங்கள், அவைகள், மிகுந்ததேஜஸ்ஸின் ரூபங்களே. கோக்கள் ஸமஸ்தராலும் பூஜிக்கத் தக்கவைகள்.

गावः स्वर्गस्य सोपानं गावः स्वर्गेऽपि पूजिताः ।
गावः कामदुघो देव्यः नान्यत्किञ्चित्परं स्मृतम् ॥

கோக்கள் ஸ்வர்க்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட, ஸோபானங்கள் (படிகள்) கோக்கள், விண்ணுலகிலும் பூஜிக்கப்படுகின்றன. கோக்கள், இஷ்டத்தைத்தரும்தேவதைகள், அவைகளைக்காட்டிலும் மேற்பட்டது ஒன்றுமில்லை, இப்பொழுது சொல்லிய கோக்களின் மான்மியம் மிகச்சிறிதே கூறப்பட்டது. முழுவதும் கூறமுடியாதது, என்று மறுமொழி பகர்ந்தார். உடனே செம்படவர்களும், வேண்டிக்கொண்டார்கள்.

மஹரிஷியே! எங்களோடு தர்சனமும், ஸம்பாஷணமும் தங்களால் செய்யப்பட்டன, सतां साप्तपदीनं सख्यम् என்று கூறப்படுகிறபடியால் ஏழு அடி சேர்ந்துநடந்தாலும், ஸாதுக்களுக்கு நட்பு ஏற்படுகிறது என்றபடி, எங்களுக்கு ப்ரஸாதம் செய்ய வேண்டும். அக்னிபகவானுக்கொப்பான தங்களை வேண்டிக்

கொள்கிறோம், எங்களுடைய அனுக்கிரஹத்திற்காக கோவைப் பிரதிக்கிரஹிக்க வேண்டும், தாங்களே சரணம் என்றனர்.

உடனே ச்யவனரும்.

प्रतिगृह्णामि वै धेनुं कैवर्ता मुक्तकिल्बिषाः ।
दिवं गच्छत वै क्षिप्रं मत्स्यैर्जालोद्धृतैः सह ॥

செம்படவர்களே, உங்களுடைய தேனுவைப் பிரதிக்கிரஹிக்கிறேன், வலையிலிருந்து எடுக்கப்பட்ட மத்ஸ்யங்களோடு, நீங்களும் பாபங்களினின்றுவிடுபட்டவர்களாய் சீக்கிரம் ஸ்வர்க்கம் செல்லுங்கள் என்று அனுக்ரகித்தார், உடனே அவரது மகிமையாலே, மத்ஸ்யங்களுடன் செம்படவர்களும் விண்ணுலகமடைந்தார்கள், அப்போது ஸ்வர்க்கத்திலேறுகின்ற செம்படவர்களையும், மத்ஸ்யங்களையும் நஹுஷன் கண்டு வியப்படைந்தான், பிறகு, கவிஜரும், ச்யவனரும் நஹுஷனை வேண்டிய வரம் கேட்டுக்கொள்ளும்படி கட்டளையிட்டனர். அப்போது அரசன், தர்மத்திலேயே புத்திதவறுமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான், உடனே அவ்விருவரும் அவ்வாறே அனுக்கிரஹம் செய்தனர், மஹாராஜன் அவர்களை பக்தியுடன் பூஜைசெய்தான். ச்யவனரும், கவிஜரும், தங்கள் தங்கள் ஆசிரமம் சென்றுர்கள். இந்த உபாக்கியானத்தால், முக்கியமாய் கோக்களின் மஹிமை சிறந்தது. என்பதைத் தவிற பிராம்மணர்களின் மஹிமையும், அரசன் அவர்களிடம் இருந்து கொள்ளவேண்டிய தன்மையும், தர்மத்தின் மேன்மையும், வெளியாகின்றன.

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

கலப்பு விவாஹ சட்டம்.

இந்தியா சட்ட நிரூபணசபையில் சென்ற இருபது மாதங்களாக ஆலோசனையிலிருந்து கலப்பு விவாஹ மசோதாவானது

சென்ற 22-3-23ல்(38-பேர் ஸாதகமாகவும் 28 பேர் பாதகமாகவும் ஓட்டுக்கொடுக்கப்பட்டு)சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவைப் பற்றிய ஆக்ஷேபணைகளை நம் இராஜ பிரதிநிதிக்குத் தெரிவித்துக்கொண்டோம். அவர் இதை சட்டசபையில் நுழையவிடாமல் தடுப்பதற்கு சம்மதப்படவில்லை. ஆனால் தன் மேலுள்ள பாரத்தை கீழே இறக்கிவிட உத்தேசித்து, அவர் செய்தநன்றி யாதெனில், அரசாங்க உத்தியோகஸ்தர்களாய் சட்டசபையில் ஸ்தானம்வகிக்கும் அங்கத்தினர்கள் இம்மசோதாவின் தீர்மானங்களில் தலையிடலாகாதென உத்தரவிட்டார். இச்சட்டத்தினால் ஒரு ஜாதியிற்பிறந்த ஒருவன் வேறொரு ஜாதிப்பெண்ணை மணம் புரிந்துகொண்டால் அதனாலேற்படும் சந்ததிகளுக்கும் பூர்வ குடும்பத்தில் சொத்து பாத்யமேற்படும். பொதுஜனங்களின் ஆக்ஷேபணைகளை மதித்து மசோதாவில் சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்களாம். எவ்வித மாறுதல்களைச் செய்திருந்தாலும் இச்சட்டம் இந்தியாவிலுள்ள (பர்மாதேசமுள்பட) ஹிந்து, சீக்கிய, ஜைன, பௌத்த குடும்பங்களுக்கு நிச்சயமாய் எதிர்பார்க்கக்கூடிய சில கஷ்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இச்சட்டம் முகம்மதியர்களையும், கிருஸ்துவர்களையும், யூதர்களையும் (Jewish), பார்ஸீகாரர்களையும் கட்டுப்படுத்தாது. ஆனால் முகம்மதிய அங்கத்தினர்களில் அறுவர் மசோதாவுக்கு ஸாதகமாகவும், எழுவர் பாதகமாகவும் ஓட்டுக்கொடுத்தார்கள். நமது ஜில்லாக்களின் பிரதிநிதிகளான ஸர். சிவசுவாமி அய்யர், ராவ்பஹதூர், T. ரங்காச்சாரியார், மாஜி. ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் T. V. சேஷகிரிஅய்யர், மாயவரம் ராவ்பஹதூர் C. S. சுப்பிரமணியம் இவர்கள் மசோதாவுக்குச் சாதகமாக இருந்தாரென்பதை இவ்விடம் தெரிவிக்கவேண்டிய தவசியமாகிவிட்டது. மதுரை முகுந்த ராஜய்யங்கார் மசோதாவுக்கு பாதகமாக ஒப்பங்கொடுத்தார். இம்மசோதாவிற்கு ஸாதகமாவிருந்த பெரும்பாலோர் இச்சட்டம் ஒரு நிர்ப்பந்தச் சட்டமில்லாததால் இதனால் ஜனங்களுக்கு பாதகங்கள் ஏற்பட்டுவிடாதென அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால் ஸமூகவிஷயத்தையும் மதவிஷயத்தையும்பற்றி ஆலோஜிப்போமானால் அவர்களுடைய அபிப்பிராயம் சரியானதல்ல.

தற்காலத்தில் நாகரீகமென்பது, அந்நிய தேசத்தவரது நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றுவதும், அவர்கள் உண்ணும் உணவை உண்பதும், கடைசியில் அவர்களிடத்தில் மோகம் விழுந்து நமது மதமென்பது இவ்வகையானது என்த்தெரியாமலேயே போவதிலும் அடங்கியிருக்கிறது. இத்தகைய நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் சிலர் அற்பசுகத்தை யுத்தேசித்து அந்நியமதத்தில் சேர்ந்து அம்மதத்தைச் சேர்ந்த பெண்களை மணம்புரிவதையும் நாம் அடிக்கடி காண்கிறோம். தற்கால நாகரீகத்தினால் தூண்டிவிடப்பட்ட இந்த ஆசைகளைக்கொண்ட சிலருக்கு இச்சட்டம் ஒரு நல்லதுணைவன்போல் உதவிசெய்யும் ஆகையால் நமதுமதத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒருஅணை போட்டதுபோல் ஆகும். மதக்கட்டுப்பாடும் ஸமூகக்கட்டுப்பாடும் அறவேயொழிந்து யாவரும் தங்களிஷ்டம்போல் நடந்துகொள்ளலாமென்ற ஒரு உபாயத்தை இச்சட்டம் ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வகையான சட்டங்கள் எதிர்காலத்தில் எவ்வளவு ஏற்படுமென்பதை இப்பொழுது சொல்வதற்கு இயலாது. இவையெல்லாம் தற்கால நாகரீகத்தின் போக்குபோலும். இச்சட்டங்களைச் செய்வதும் நமது சகோதரர்களான ஹிந்துக்களே.

ஓர் மதாபிமானி.

ஸ்ரீ ராமவிஜயம்.

(கஉக-வது பக்கத்தொடர்ச்சி.)

அப்படியே என்றுசொல்லி திடீரென்று உடலைப்பெருக்க அடித்து, மறுபடியும் சின்னும் சிறிதாகச் செய்யவே கட்டுகளெல்லாம் அவிழ்ந்தன, தன்னை ரக்ஷித்துவரும் ராக்ஷஸர்களையெல்லாம் அடித்து வெறட்டிவிட்டு நமது வாலிலிருக்கும் அக்கினிக்கு இன்னகரத்தை ஆஹாரமாய்க் கொடுப்போம் என்று திடீரென்று கிளம்பி வீடு வீடாய் எரித்தார். ஒருவர் வீடுபாக்கியில்லாமல் ஜ்வலிக்கும்படியாகச் செய்து உத்தியான வனங்க

ளையும் சுட்டுச் சாம்பலாக்கினர். படபடவென்று சப்தித்துக் கொண்டு கோட்டைகொத்தளங்களிடிந்தன. யானை குதிரைகள் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு கதறியோடின. ஸ்திரீ புருஷர்கள் ஹாஹா வென்று ஓலமிட்டுக்கொண்டு குளங்களிலும் ஸமுத்திரத்திலும் போய் விழுந்தார்கள். வெள்ளி பொன், ஆபரணங்கள் ரத்னங்களெல்லாம் உருகியோடின. லங்கைமுழுதும் அக்னிமயமாய்ச் சிவந்து புகைமயமாய்க் கறுத்து தணல்தணலாய்ப் படிந்தது. இஷ்டப்படி காரியத்தைமுடித்து ஸமுத்திரத்தில் வாலை நீட்டி அக்னியை அணைத்தார். சிறிது ஸந்தோஷித்தார். என்ன முட்டால்தனம் செய்தோம். ஸீதாதேவி இன்னகரத்திலிருப்பதை மறந்து ஊர்முழுதும் கொளுத்திவிட்டோமே. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டதுபோல், மகாபாவியானேனே, அல்லது ஸீதாதேவிக்கு ஒரு துரிதமும் ஏற்பட்டிராது. மகாபதி விரதையான தேவியை அக்னிபகவான் அண்டுவாரா? அக்னியையே தஹித்துவிடாதா என் அன்னையின் தவம். என்று கலங்கினர். ஆகாசத்தில் சென்ற சாரணர்கள் "என்ன ஆச்சர்யம்! இன்னகரம் முழுவதும் தஹிக்கப்பட்டும் ஜானகி கொஞ்சம்கூட உபத்திரவமில்லாமல் விளங்கி வருகின்றளே" என்று சொல்லக்கேட்டு ஸந்தோஷித்து தேவியை நேரில்போய் பார்த்தார். தேவியினிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு ஓரே தாண்டலாய் ஸமுத்திரத்தைத் தாண்டி அங்கதாதிகளைப்பார்த்து "கண்டேன் ஸீதையை" என்று சொல்லி ஸாங்கோபாங்கமாய் நடந்த ஸங்கதிகளையெல்லாம் சொன்னர். உடனே இதை ராகவனிடம் போய்ச்சொல்லுகிறதா அல்லது எல்லாருமாகப் போய் ஸீதையை அழைத்துக்கொண்டுபோய் ராமரிடம் செல்லுகிறதா என்று வானரர்களெல்லாம் சேர்ந்து ஆலோசித்தார்கள். ராகவனிடத்தில் முன்னல் போய்ச்சொல்லி அவர் உத்திரவுபிரகாரம் நடந்துகொள்ளுகிறது என்று கடைசியில் தீர்மானம் ஏற்பட்டது. உடனே எல்லாருமாய் புறப்பட்டு கிஷ்கிந்தாநகரத்திற்கு ஸமீபமான மதுவனத்தில் பிரவேசித்து அங்கதன் அனுமதியின்பேரில் அவ்வனத்திலுள்ள தேன்களை அள்ளி

அள்ளிகுடித்தார்கள். மதுமயக்கங்கொண்டு பண்டும் பரிஹாஸமுமாய்க் குதித்துக் கூத்தாடினார்கள். மரங்களில் வால்களை மாட்டிக்கொண்டு ஏலேலோவென்று ஊஞ்சலாடினார்கள்.

அந்த வனாக்ஷகனும் சுக்ரீவன் மாமனுருமான ததிமுகன் அநேக காவல்காரர்களுடன் இவர்களைத் தடுத்தான். இவர்கள் அவனையடித்தார்கள். அடிபொறுக்கமுடியாமல் சுக்கிரீவ மகாராஜனிடத்தில் போய்ச்சொல்லி உங்களைத்தகுந்தபடி தண்டிக்கிறேன் என்று சொல்லி சுக்கிரீவனிடம் சென்று வானரபாஷையில் நடந்தத்தைத் தெரிவித்தான். என்ன சொல்லுகிறான் என்று ஸ்ரீராமன் கேட்க, நாத அநுமான் முதலான வானரர்கள் ஆனந்தபரவசமாய் என் மதுவனத்தை ஜோராவரி செய்கிறார்களாம். அநுமான் ஸீதையைப் பார்த்துவந்ததினால் இப்படி உத்ஸவம் கொண்டாடுகிறார்கள். இதில் சந்தேகமில்லையென்றார். திரும்பிவந்த ததிமுகன் முகமாய்ச் சங்கதிகளைத்தெரிந்துகொண்டு எல்லோருமாய் ஸ்ரீராம ஸன்னிதியில் வந்தார்கள். ஸீதையைக்கண்ட விசேஷங்களையெல்லாம் ஹநுமானிடமாய்க் கேட்டு ஸ்ரீராமன் ஆனந்தமடைந்தார். கண்களில் ஆனந்த வெள்ளம்பெருக அவளாலனுப்பப்பட்ட சூடாமணியை வாங்கி அதை முத்தமிட்டார். சுக்கிரீவன், ராகவ! கவலை நீங்கியது, புறப்படுங்கள். இராவணனை ஜயித்து, ஸீதாதேவியுடன் ஸிம்மாஸனத்திலேறி பட்டாபிஷேகத்தையடையும் தங்களைப் பார்க்க எல்லோரும் ஆசைப்படுகிறோம் என்றார். ராகவன் அநுமானை பிரசம்ஸித்து தனது ஆலிங்கனமாகிய அரிய, பெரிய ஸம்மானத்தை அவருக்குச் செய்தார்.

ஸ்ரீரஸ்து.

சுந்தரகாண்டம் முற்றிற்று.

ப. கே. கல்யாணராம சாஸ்திரிகள்.

தர்மம்.

(சஉஅ-வது பக்கத்தொடர்ச்சி).

பாருங்கள் நாம் பால்யத்திலேயே படித்த ரகுவம்ச காவ்யத்தில் திலீபன் புத்திரனில்லாமையால் வருந்தித் தபோவனம் சென்று தனது குலகுருவை வணங்கிப் புத்திரனில்லாக்குறையைப்பற்றி அவரிடம் கேட்டதும் அவர் தியானத்தினுலறிந்து சொல்லிப் பிறகு நந்தினி என்னும் பசுவை ஆராதித்துப் புத்திர பாக்யம் பெற்றுனென்றுமிருக்கிறது. திலீபன் வஸிஷ்டரிடம் பேசும்போது, மகரிஷியே! எனக்கு ராஜ்யத்தில் யாதொரு குறையுமில்லை யென்றும்,

तव मन्त्रकृतो मन्त्रैर्दूरात् प्रशमितारिभिः।
प्रत्यादिश्यन्त इवमे दृष्टलक्ष्यभिदः शराः ॥

மந்திரத்தையறிந்த உமது மந்திரத்தினுலே எனது சத்துருக்கள் வெகு தூரத்திலேயே அழிந்துபோகிறதால் சமீபத்தில் தோன்றக்கூடிய லக்ஷ்யத்தைமட்டும் அடிக்கிற என்பாணங்கள் வீணுய் ஆகின்றன என்றுர். இதனுல் மந்திரப்பிரபாவத்தால் எவ்வளவு காரியம் நடந்திருக்கிறதென்று நினைக்கிறீர்கள். வஸிஷ்டர் திலீபனை அரசனென்று பொருட்படுத்தாது எவ்வளவோ கடுமையான நியமதர்மங்களை விதித்தார். அதற்கு அரசனும் தான் ராஜாவென்று இறுமாப்புக்கொள்ளாமல் குருசொன்னதர்மங்களை அப்படியே அனுஷ்டித்தான். அதனுல் அவனுக்கு அந்த தர்மானுஷ்டானத்திற்குத்தகுந்த பலனை நந்தினியே 21-வது நாளில் ஒருசிறியபரீக்ஷை செய்துவிட்டுக்கொடுத்தது அது செய்த பரிக்ஷைஎன்னவென்றுல் தினந்தோறும்காலையில் எழுந்து ஸுதக்ஷிணைஎன்னும் தன்பத்தினியால் பூஜைசெய்யப்பட்டுகன்றுவிட பசுவை காட்டுக்குமேயப்போகிறபோது அதனிஷ்டப்படியெல்லாம் மேய்ந்தும் நீர் அருந்தியும் படுத்தும்போயும் நிழலில்நின்றும் இருக்கும்போதெல்லாம் தானுமப்படியே செய்து அது ஆசிரமத்திற்குத் திரும்பும்போது தானும்பின்னுல் வரவேண்டுடுமென்று குலகுருவிதித்தபடி நியமதர்மத்தைக் கொஞ்சமும்

தவருதனுஷ்டித்து வருங்கால் 21வது நாளில் அப்பசு ஒருநாளும்போகாத் ஹிமவத்பர்வதத்தின் குகையில் அன்று நுழைந்தது. அரசனும் அங்கு நுழைந்து அந்தமலையினழகைச் சற்று பார்க்கலானுன். அச்சமயம் ஓர் பெரும் சிங்கம் அம்மாட்டின் முதுகிற்பாய்ந்து கழுத்தைக் கௌவ்விக்கொண்டது. அச்சமயம் பசு ஒலமிட்டது. அதைக்கண்டு திடுக்கிட்ட அரசன் உடனே வில்லை இடது கையிற்பிடித்து அம்பராப்பையிலிருந்து பாணத்தை எடுக்கவெண்ணி அதிற்கையைப் போட்டான். பிறகு கை அதினின்றும் எடுக்கப்படவில்லை. வில்லைப்பிடித்த இடதுகையும் அப்படியே ஸ்தம்பித்துவிட்டதுகண்டு அரசன் மிகச் சினங்கொண்ட போதிலும் மந்திரத்திஞற் கட்டுண்ட பாம்புபோல சித்திரப்பதுமையாய் நின்றுன். அரசனைப்பார்த்து சிங்கம் மனிதன்பேசுவதுபோல கம்பீரமாய்ச் சொல்லிற்று. ஓ அரசனே! ஏன் வீணுப்ச் சிரமப்படுகிருய், வீணிற்சினம் கொள்கிருய் உன் கையை எடுத்துவிடுகிறேன். நீ பேசாமற் திரும்பிப்போ என்னை அடிக்க உன்னுலாகாது. நான் உண்மையான சிங்கமல்ல. நான் பரமேசுவரனது பிரமதகணங்களுக்குள் ஒருவன். எனது பெயர் கும்போதரன். நான் ஈசனுக்குக் குடைபிடிக்கும் பாக்கியம்பெற்ற நிகும்பனது மித்திரன். இதோ பக்கத்திலிருக்கிற தேவதாரு விருக்ஷத்தைப் பார்வதிதேவியானவள் தனது புத்திரன் ஷண்முகனைப்போல் எண்ணி தன் கையிலேந்திய குடத்து நீரால் வளர்த்துவந்தாள். அத்தகைய தேவிக்கு இம்மரத்தில் இருக்கும் பிரீதிக்கு அளவில்லை. அப்படியிருக்க ஒருநாள் ஒரு காட்டுயானை தன் கன்னத்திலேற்பட்ட தினைச்சலைப்போக்கிக்கொள்ள இம்மரத்தில் உறசியதால் மரப்பட்டை கொஞ்சம் பெயர்ந்துபோயிற்று. அதைக் கண்ணுற்ற தேவிக்கு நேர்ந்த துக்கம் எத்தகையதென்று சொல்லமுடியும். குகன் அஸுரயுத்தத்தில் அவர்களது அம்புகளால் துளைக்கப்பட்டு இரத்தப் பெருக்கோடிருப்பதைக் கண்ணுற்று எவ்வளவு துக்கமடைந்தனளோ அதற்கொப்பிடலாம். பிறகு பரமேசனிடம் தெருவித்து இனி இவ்விதம் இம்மரத்திற்கு யாதொருதீங்கும் வராவண்ணம் காவலனுப் என்னை நியமித்து இந்தச்சிங்க

ரூபத்தையும் இதன் சமீபம் வருகிற எந்தப் பிராணியையும் சாப்பிடும்படியும் கட்டளையிட்டார். ஆகையால் திலீபனே என்னை அடிக்க உனனுல் முடியாது போ. ஆனுல் நீ மிகுந்த பக்தியுள்ளவன். நீ என்னசெய்வாய் குருவுக்கு நீ இந்தப்பசுவுக்குப்பதிலாய் உன் ராஜ்யத்திலிருந்து குடம்பால் கறக்கக்கூடிய ஆயிரக்கணக்கான பசுக்களைக் கொடுத்துவிடு என்று பலவாறு சொல்லிற்று. இதைக்கேட்ட அரசன் சிங்கமே நீ சொல்வது சரி. ஸ்தாவரஜங்கம வஸ்துக்களுக்கு ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்திற்குக் காரணரூபரான பகவான் யாவருக்கும் வணங்கத்தக்கவரே! ஆனுல் ஆஹிதாக்னியான குருவின் தனமான இந்தப்பசுவும் நாசமாவதைப்பார்த்துக்கொண்டிருக்கலாகாது. ஆகையால் நீ தயவுசெய்து இந்தப்பசுவை விட்டுவிட்டு எனது சரீரத்தினுல் உனது பாரணை நடக்கட்டும். குருவுக்கும் நான் கடனற்றனுவேன். எப்போதும் அழியக்கூடிய இந்தசரீரத்தில் என்னைப்போலொத்தவர்களுக்கு ஆசை கிடையாது என்ருன்.

இதைக்கேட்ட சிம்மம் சிரித்து அடா! என்ன உன்புத்தி நீ கொஞ்சமும் ஆழ்ந்தாலோசிப்பவனுய்த் தெரியவில்லை. பார். நீ இந்தப் பசுவுக்காக உன் சரீரத்தைக்கொடுத்தால் உனது திவ்விய வம்சம் போய்விடுகிறது. மற்றும் பிரஜைகள் அரசன் இல்லாமல் மிகுந்த கஷ்டமடைவார்கள். ரிஷிக்கோ நீ ஏராளமான பசுக்களையும் கொடுத்துவிடுவதால் அவரது கார்யத்திற்கும் குறைவில்லை. குருவும் உன்னை சபிக்க நியாயமில்லை. இவ்வளவையும் நீ ஆலோசித்தாயா? ஆனதால் பேசாமற்திரும்பிப் போவென்றது. இவ்வளவையும் கேட்ட அரசன் என்செய்வான்? நீங்களே ஆலோசியுங்கள். பேசாமல் திரும்பிவந்து குருவை வணங்கிவிட்டால், அவர்தான் என்னசொல்வார் ஒன்றும் சொல்லமாட்டார் என்றல்லவா திரும்புவான்? நமக்கும் அதுதானே தர்மமாய்த்தோன்றும். இதை வீணில் வளர்ப்பானேன். அரசன் கடைசியில் சிம்மத்தினிடம் வெகு அழகாய்ப் பேசினுன்.

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.